
# தந்தை பெரியார் – குருகுல மாணவர்கள்!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி






படிக்கிறேன், பரீட்சை எழுதியிருக்கிறேன் என்றேன். உத்தியோகம் பார்க்கப் போகிறாயா? என்று கேட்டார் இல்லை உத்தியோகம் விரும்பவில்லை, பொது வாழ்வில் ஈடுபட வேண்டும் என்று பதில் அளித்தேன். அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார். நான் அவருக்கு சுவீகாரப் புத்திரன் ஆகிவிட்டேன். இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர் தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததில்லை. அதே காரணத்தால் தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலைவரை ஏற்படுத்தவில்லை. அவசியம் என்றும் கருதவில்லை, இதய பூர்வமான தலைவர் , இதயத்திலே குடியேறிய தலைவர், நமக்கெல்லாம் அவ்வப்போது நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை, தலைவர் பதவியை, நாற்காலியை காலியாகவே வைத்திருக்கிறோம். அந்த பீடத்திலே நாற்காலியிலே வேறு ஆட்களை அமர்த்தவோ,அல்லது நாங்களே அல்லது நானோ அமரவோ விரும்பவில்லை என்று குறிப்பிட்டார்.

1937ஆம் ஆண்டு ஈரோடு சென்ற அண்ணா, அங்கு பெரியாரின் 'குடிஅரசு' நாளிதழில் துணை ஆசிரியராக ரூபாய் 60 சம்பளத்துக்கு வேலைக்குச் சேர்ந்தார்.



அப்போது அவருக்கு வயது 28, அந்த இளம் வயதில் அண்ணாவின் திறமையைக் கண்டு வியந்த பெரியார், அதே ஆண்டு துறையூரில் நடந்த சுயமரியாதை இயக்க மாநாட்டுக்கு தலைமையேற்று நடத்தும் பொறுப்பையும் அண்ணாவுக்கு அளித்தார். இந்தச் சந்திப்பு என்பது பெரியார் மீது அண்ணா அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையும், அண்ணா அவர்கள் மீது பெரியார் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையுமாகும்.

பெரியார், அண்ணாவின் தன்னலமற்ற தொண்டை தெரிந்து கொண்டுதான் அண்ணாவை தன்னுடன் இணைத்துக் கொண்டார். அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி, தமிழ்நாட்டில் அட்சியையும் அமைத்தார். தி.மு.கழக ஆட்சி நல் திட்டங்களுக்கு சட்ட அங்கீகாரம் பெற்று தரவும் செய்தது. புரோகிதர் வைத்து திருமணம் எங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்த அக்காலத்தில் சுயமரியாதை திருமணங்கள் ஆங்காங்கே நடைபெறத் தொடங்கி விட்டன. அந்தத் திருமணங்களுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் இருந்தது, அந்த அங்கீகாரத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் சட்டமாக்கினார்.

தி.மு.கழகத்தின் ஆட்சியை தந்தை பெரியாருக்கு காணிக்கையாக்குகிறேன் என்று அண்ணா கூறியதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஆம், தந்தை பெரியாரின் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுப்பேன் என்ற அர்த்தம் அதில் பதிந்திருந்தது. சொன்னது மட்டுமல்ல தி.மு.கழகம் முதன் முதலில் ஆட்சி கட்டிலில் அமர்ந்ததும், பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சியில் தங்கிருந்த தந்தை பெரியார் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுதான் தந்தைக்கும் தனயனுக்கும் உள்ள பாசம், குருவுக்கும் சிஷியனுக்கும் உள்ள பந்தம்.

எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தந்தையாக, தமிழ்நாட்டின் பிதாமகனாக இருப்பவர் தந்தை பெரியார், அவருடைய வாழ்த்துதான் இந்த நாட்டினை நல்வழி படுத்தும், அவர் எண்ணம் தமிழ்நாடு செழிக்க வேண்டும் என்பது, தமிழ்நாட்டில் மூட நம்பிக்கை ஒழிய வேண்டும் என்பது, அதனை செயல்வடிவம் செய்து கொடுத்தது பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இதே போன்று தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1944 ஆம் ஆண்டு பாண்டிச்சேரியில் திராவிடர் கழக மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களைச் சந்தித்தார். தனது 'குடிஅரசு' இதழில் பணியாற்ற அழைத்தார். அதில் 1945 முதல் துணை ஆசிரியராக பணியாற்றத் தொடங்கினார் கலைஞர். மொத்தம் 11 மாதங்கள் இதில் வேலை செய்தார்.

பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் குட்டு வாங்கினாலும் மோதிரக் கையால் குட்டு வாங்க வேண்டும் என்பார்கள். இவர்கள் இருவரும் பகுத்தறிவுவாதி பெரியார் கையால் குட்டு வாங்கியவர்கள். 'குடிஅரசு' பத்திரிகையில் இருவரும் பணி செய்தவர்கள், துணை ஆசிரியர்களாக பெரியாரிடத்தில் பணி செய்ததுடன் மக்கள் பணி, நாட்டுப் பணியை கற்றவர்கள் . தந்தை எட்டடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பார்களே, அதே போன்று இருவரும் பாய்ந்து தான் தமிழ்நாட்டினை மேன்மை படுத்தினர்.

திராவிடர் கழகத்தில் இருந்து பேரறிஞர் அண்ணா பிரிந்து தி.மு.கழகத்தை தொடங்கிய போது திராவிடர் கழகத்தின் கொள்கை, கோட்பாடுகளை அப்படியே கொண்டுதான் தி.மு.கழகம் செயல்படும் என்று சொன்னது மட்டுமின்றி அவர் வழியில்தான் கலைஞரும் சரி, நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அக் கொள்கையை கிஞ்சிற்றும் தடம் புரளாமல் இன்றைக்கும் தி.மு.கழகம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதலில் சட்டமாக்கியது சீர்த்திருத்த திருமணங் கள் இதற்குமுன் நடைபெற்றதும் சரி, இனி நடைபெறும் திருமணங்களும் செல்லுபடியாகும் என்று சட்டமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து தந்தை பெரியாரின் கனவை நனவாக்கினார் என்றால்,1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாநாட்டில் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை அளிக்கும் தீர்மானம் தந்தை பெரியார் அவர்களால் நிறைவே ற்றப்பட்டது.

அத் தீர்மானத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது அனைத்து பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டப்பேரவையில் சட்டம் கொண்டு வந்து சட்டமாக்கினார்.

பெண்கள் சுயமாக நின்றிட அவர்களுக்கு கல்வி அவசியம் என்பது பெரியாரின் கனவு. அக்கனவை நிறைவேற்றும் வகையில் பெண்கள் அனைவரும் படித்திட வேண்டும் என்ற எண்ணத்தில் படித்த பெண்களுக்கு திருமண நிதி உதவி வழங்கும் திட்டத்தை கலைஞர் கொண்டு வந்தார்.

முதலில் எட்டாம்வகுப்பு வரை என்றார், அதற்கடுத்து எஸ்.எஸ்.எல். சி. வரை என்றார், அதற்கடுத்து பிளஸ் டூ வரை படித்த பெண்களுக்கு திருமண நிதி உதவி அளிக்கப்படும் என்று அறிவித்தார்.

பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு படிக்க முன் வரத் தொடங்கி விட்டனார். இதோ பெரியாரின் குருகுல மாணவர்கள் அண்ணா, கலைஞர் என்றால் இம்மூவரின் மாணவர் தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். அவரும் பெண் கல்வியை ஊக்குவிக்க புதிய அறிவிப்பு கொண்டு வந்தார்கள்!

ஆம்; கல்லூரியில் படிக்கும் பெண்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு. தற்போது பெண்கள் அனைத்து கல்லூரிகளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான பெண்கள் படிப்பில் சேரத் தொடங்கி விட்டனர்.

பெண்கள் முன்பு எட்டாம் வகுப்பு வரை படித்தால் போதும் என்றனர் பெற்றோர், அதற்கடுத்து பத்தாம் வகுப்பு. எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தால் போதும் என்றனர். அதற்கடுத்து ப்ளஸ் டூ வகுப்பு வரை படித்தால் போதும் என்றனர். இப்போது கல்லூரி வரை பெண்கள் படிக்க வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பெண் பிள்ளைகளை படிக்க வைக்கின்றனர்.

முன்பு கிராமப் புறங்களில் பெண்கள் வீட்டிற்குள்ளே முடங்கிக் கிடந்தனர். காலம் மாற மாற ஒவ்வொரு கிராமத்திலும் ஓரிரு பெண் பிள்ளைகள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ சென்றனர் அன்று.

இன்று, நகரப் பெண்கள் மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள அனைத்து பெண் பிள்ளைகளும் கல்லூரி வரை படிக்கத் தொடங்கி விட்டனர் என்றால், அதற்கு முழு முதற் காரணம் தந்தை பெரியார் போட்ட விதை இன்றைக்கு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆலமரமாக வளர்க்கப்பட்டது.

இதோ அந்த ஆல மரத்து விழுதுகளாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்ந்து அவர்கள் அடியொட்டி பெண்கள் படிக்க அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டு இருக்கிறார். அதன் மூலம் இன்றைக்கு பெண்கள் அனைவரும் கல்வியில் சிறந்தவர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் படிக்கும் மாநிலம் தமிழ்நாடாகத் திகழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல, விண்வெளியில் சந்திரயான் அனுப்புவதிலும் தமிழச்சிகளின் பங்களிப்பு மிகுந்து காணப்படுவதற்கு முழு முதற் காரணம் தந்தை பெரியார் அவர்கள்தான். அவரின் கனவை அவரின் மாணாக்கர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் நிறுவி சாதி சமயமற்ற சமுதாயத்தை கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நிலை நாட்டி விட்டார்.

தந்தை பெரியார் கடவுள் இல்லை, கடவுளை கும்பிடுகிறவன் காட்டு மிராண்டி என்று சொன்னாலும், கோவிலுக்குள் அல்ல அல்ல கோவில் இருக்கும் சாலையில் ஒரு பிரிவினர் செல்லவே தடை இருந்த வைக்கம் ஊரில் அவர்களை கோவிலுக்குள், கோவில் இருக்கும் சாலையில் அனுமதிக்க வேண்டும் என்று போராடியவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

அப்போராட்டத்தில் வெற்றி பெற்று 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்திற்கு சொந்தக்காரர் ஆனார் தந்தை பெரியார் அவர்கள். கடவுள் இல்லை என்றாலும் மனித உரிமைக்காக குரல் கொடுத்தவர் தந்தை பெரியார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிள்ளையாரையும் கும்பிட மாட்டேன், பிள்ளையார் சிலையையும் உடைக்க மாட்டேன் என்று சொன்னது மட்டுமின்றி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் திருவாரூரில் 25 ஆண்டுகாலமாக ஓடாமல் இருந்த ஆழித் தேரை ஓட வைத்தார். இப்படி நாத்திக வாதிகளாக கடவுள் மறுப்பு கொள்கை உடையவர்களாக இருந்தாலும், மனிதர்களின் எண்ணங்களுக்கு மதிப்பு கொடுத்து அவர்களின் கோரிக்கைகளுக்கு செயல் வடிவம் கொடுத்தனர்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்பது தந்தை பெரியாரின் கனவு. அது பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளாக இருந்து வந்தது. அக் கனவை சட்டமியற்றி , பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றினார் முத்தமிழ றிஞர் கலைஞர். கலைஞர் சட்டமியற்றினார், அவரது தனயன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நடைமுறைப்படுத்தினார். இன்றைக்கும் பெரும்பாலான கோவில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகி விட்டனர். பெண் ஓதுவார்களும் நியமிக்கப்பட்டு கடவுள் துதிபாடிக் கொண்டிருக்கின்றனர்.

இப்படி தமிழ்நாட்டு வளர்ச்சியை நாம் எண்ணிப் பார்த்தால், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை, பெண்களின் முன்னேற்றத்தை நாம் எண்ணிப் பார்த்தால், இவற்றுக்கெல்லாம் ஒரு வித்து உண்டென்றால் அதுதான் தந்தை பெரியார் அவர்கள். ஆம், தமிழ்நாட்டின் இன்றைய அசுர வளர்ச்சி, தமிழர்களின் அசுர வளர்ச்சி, பெண்களின் அசுர வளர்ச்சி என்று அனைத்திற்கும் அச்சாரமாகத் திகழக் கூடிய ஒருவர் உண்டென்றால் அவர்தான் தந்தை பெரியார்.

தந்தை பெரியார் அவர்களின் குருகுலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் படித்திராவிட்டால் இந்த முன்னேற்றங்கள் தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்குமா? என்ற கேள்வி நம் மனதில் எழுவதில் வியப்பொன்றுமில்லை.

தந்தை பெரியாரின் குருகுலத்தில் படித்த மாணவர்கள் சிறந்த முறையில் அதனை பயன்படுத்தி மேலும் மேலும் தங்களை மெருகேற்றிக் கொண்டனர்.

தந்தை எட்டடி பாய்ந்தால் பிள்ளை 16 அடி பாய்வார்கள் என்ற பழ மொழிக்கு ஏற்ப செயல்பட்டனர் பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும்!

அன்றைக்கு கேள்விக்குறியாக இருந்த திராவிடர்கள்; இன்றைக்கு

## அனைத்து சாதியினரும் அர்ச்சகர் பணி நியமனம் வழங்கிய முதல்வர்



ஆச்சரியக்குறியாக நிமிர்ந்து நிற்பதற்கு தந்தை பெரியார், அவரது மாணக்கர்கள் அண்ணா, கலைஞர் ஆகியோரே ஆவார்கள்!

தற்போது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் இம் மூவரும் நம்மிடம் இல்லை!

ஆனால் அவர்களது உழைப்பு, அவர்களது சிந்தனை, அவர்களது எண்ண ஓட்டம் இவைகள் அனைத்தும் ஒவ்வொரு தமிழர்களின், திராவிடர்களின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்திருப்பதினால்தான் இன்றைக்கு தமிழ்நாடு பகுத்தறிவில் சிறந்து விளங்குகிறது, சமூக நீதியில் சிறந்து விளங்குகிறது,

இப்படி தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிகோலிய இம் மூவரின் பிறந்த நாளில் அவர்களின் தொண்டினை, அவர்களின் மக்கள் பணியினை, அவர்களின் கருத்தியல்களை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

தாழ்ந்து கிடந்த தமிழகம் இன்றைக்கு இந்தியாவில் ஏன் உலக அளவில் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஏன் விண்ணுலகத்தையும் தமிழன் தன் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறான் என்றால் தந்தை பெரியாரின் கனவுகள் நனவாகி விட்டன என்று தானே அர்த்தம்!

தந்தை பெரியார் அவர்களின் கனவுகளை, எண்ணங்களை அவரின் மாணாக்கர்கள் அண்ணா, கலைஞர் செயல்வடிவம் கொடுத்தனர். இவர்கள் மூவரின் மாணவனாக இருந்து முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் அவர்களின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார் திராவிட மாடல் ஆட்சி மூலமாக!

பெண் கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், விண்வெளி ஆராய்ச்சி, சாதி, சமயமற்ற சமுதாயம் தமிழ்நாட்டில் அமைந்திட வேண்டும் என்பது தந்தை பெரியார் அவர்களின் ஆசை.

அவ் ஆசைகள் அனைத்தும் பெரியாரின் குருகுல மாணாக்கர்கள் பேரறிஞர் அண்ணா, கலைஞர் மூலம் பெரும்பாலும் நிறைவேறி விட்டன. இவ் மூவரின் மாணக்கரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், திராவிட மாடல் ஆட்சியில் தந்தை பெரியார் குறித்த அறிவிப்புக்கு தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல. மனித சமுதாயமே முதல்வருக்கு நன்றி சொல்ல கடைமைப்பட்டிருக்கிறது.

ஆம், அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பாக தந்தை பெரியர் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாள் "சமூக நீதி நாள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். இன்று தந்தை பெரியார் அவர்களின் 146 வது பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த சமூக நீதி நாளாக கடைப்பிடிக்கப் படுகிறது.!

தந்தை பெரியார் பிறந்த இந்த "சமூக நீதி" நாளில் தமிழர்கள் அனைவரும் உறுதிமொழி ஏற்றிட வேண்டும்.

உறுதி மொழி ஏற்று இதற்கான அறிவிப்பினை அறிவித்த முதல்வருக்கு நன்றி சொல்வோம்.

**வாழ்க தந்தை பெரியார்!**
**பெரியார் புகழ் ஓங்குக !!**

## பெண்கள் சுதந்திரமாய் வாழ!



பெண்கள் அடிமைத் தன்மையற்று சுதந்திரமாக வாழ வேண்டுமானால், பெண்கள் நிறையப் படிக்க வேண்டும். மக்களோடு சேர்ந்து பழகவிட வேண்டும். ஆண்களை விட அதிகக் கல்வியும், உரிமையும் கொடுக்க வேண்டும். ஆண்கள் தங்கள் மனைவியை மட்டும் நினைக்கிறார்களே ஒழிய, தங்கள் தங்கையை, தாயை எண்ணிப் பார்ப்பது கிடையாது. அப்படி எண்ணிப் பார்த்தால், பெண்களை அடிமைகளாக வைத்திருக்க சம்மதிக்க மாட்டார்கள். பெண்கள் ஆண்களைப் போன்று சமுதாயக் காரியங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் சரிசமமாக நண்பர்களைப் போன்று வாழ வேண்டும். இருவரும் தங்கள் பெயர்களைச் சொல்லி அழைக்க வேண்டும்.

**- தந்தை பெரியார்**